# அனைத்துலகச் சைவ மாநாடு - 2017

## " சைவ சித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும் "

# ஆய்வடங்கல்

**ISC**
**2017**

21, 22,23 - ஏப்ரல் - 2017
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

இரண்டாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2017
ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்

கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்

திரு. ச. முகுந்தன்

திரு. ச. பத்மநாபன்

திரு. பொ. சந்திரசேகரம்

திரு. சி. ரமணராஜா

திரு. தி. செல்வமனோகரன்

திரு. க. கந்தவேள்

**பொறுப்புத் துறத்தல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

தென்தமிழும் ஆதிசிவனின் இருகண்கள் என உணர்த்தி அவ்விருகண்களையும் சமமாகப் பயன்படுத்தினால், மூன்றாவதாகிய ஞானக்கண்ணைத் திறப்பது இலகு என் பதையும் வலியுறுத்தி, இனி வரும் காலத்தில் செம்மொழித் தகைமை பெற்ற இவ்விரு மொழிகளிலும் மக்கள் தம் அறிவை வளர்த்து இறைபணி நிற்கவேண்டும்.

**அடிக்குறிப்புக்கள்**

1. *வைத்தீஸ்வரசர்மா (பதி.), (1932),* பிராசாததீபம். பருத்தித்துறை *கலாநிதி யந்திரசாலை, முன்னுரை.*
2. *1. சுவாமிநாத சிவாசாரியர் செ., (பதி.), (1977)* காமிகாகமம் , *தென்னிந்திய அர்ச்சகர் சங்கம்* 2 *சபாரத்ன சிவாசாரியர் எஸ்.பி., (2009),* ஸ்ரீமத் சிவஞானபோதம், *பிள்ளையார்பட்டி சிவநெறிக்கழகம், முன்னுரை*
3. *கடவுள்மாமுனிவர், (கலி 4997),* திருவாதவூரடிகள் புராணம். ம. க. வேற்பிள்ளையவர்களின் *விருத்தியுரை வித்தியாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம் திருப்பெருந்துறைச்சருக்கம், பா. 35.*
4. சிவஞானபோதம். *(2009), முன்னுரை.*
5. சிவஞானபோதம். *(1952), பழையவுரை முன்னுரை, திருவாவடுதுறை ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக பரமாசாரிய சுவாமிகள் நிறைபணி விழா மலர், முன்னுரை.*
6. சிவபோகசாரமும் சொக்கநாத வெண்பாவும், *(1956), தருமபுர ஆதீன வெளியீடு, எஸ்.சதாசிவ முதலியார் தொடக்கவுரை.*
7. சிவஞானபோதம் *(1952) மு.கு. நூல்.*
8. ஸ்ரீமத் சிவஞானபோதம் *(2009), முன்னுரை.*

# தமிழர் பண்பாட்டில் சைவசித்தாந்த மரபு: மானிடவியல் நோக்கு

ச. சிறிகாந்தன்

**ஆய்வுச்சுருக்கம்**

*மக்களின் வாழ்வியல் அனுபவங்களுடன் ஒன்றிணைந்தவையே சமயமும் தத்துவமும். சமயம் தொடர்பான ஆய்வுகள் மானிடவியல் புலத்திற்கு தொன்மையானது. தொன்மை மக்களின் வாழ்வியல் கூறுகளுடன் ஒன்றியிருந்து சமயக் கருத்துக்களை பண்பாட்டுச் சார்புடைமை நிலையில் விவரித்தவர்கள் மானிடவியலாளர்கள். இந்தவகையில் தமிழர் பண்பாட்டு மரபில் சைவசித்தாந்தம் தொடர்பாக இவ்வாய்வு ஆய்வு செய்கின்றது.*

*மரபும், வழக்காறுகளும் பண்பாட்டின் அங்கங்களாகும். தமிழர் பண்பாட்டு மரபானது நீண்ட தொடர்ச்சித் தன்மை கொண்டது. நீண்ட நெடிய தமிழர் பண்பாட்டுத் தொடர்ச்சியில் சமயமும் அதனோடிணைந்த வாழ்வியலும் முதன்மை பெறுகின்றது. ஒவ்வொரு சமூக பண்பாட்டு மரபுகளும் அம் மக்களின் பாரம்பரியமான மரபார்ந்த அறிவுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. பண்பாடுகளில் நிலவும் 'தத்துவம் மரபு' என்பது பண்பாட்டின் மரபார்ந்த அறிவின் வெளிப்பாடாக அமைந்திடக் காணலாம். இந்நிலையில் தமிழர் பண்பாட்டு மரபில் சைவசித்தாந்த தத்துவ சிந்தனையின் வியாபகத் தன்மையினை இவ்வாய்வு மானிடவியல் நோக்கில் வெளிக்கொண்டு வருகின்றது.*

**திறவுச் சொற்கள்:** தமிழர் பண்பாடு. சைவசித்தாந்தம். பண்பாட்டு மரபு

**அறிமுகம்**

தமிழர் பண்பாடு நீண்ட நெடிய பண்பாட்டு வரலாற்றினைக் கொண்டது. தென்னாசியப் பிராந்தியத்தில் தமிழர் பண்பாட்டின் சிறப்புக்களைக் காலந்தோறும் வெளிப்படுத்தும் வகையில் பல்வேறுபட்ட தமிழ் இலக்கியப் படைப்புக்களும் சமூக வாழ்வியல் மரபுகளும் இருந்துவந்துள்ளன. தமிழரது வரலாற்றுடன் இணைந்த மக்களின் வாழ்வுமுறையானது தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவத்தினை உலகறியச் செய்துள்ளது. இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு ஆரியருடைய வருகையு டன் எழுதப்பட்டு வந்தாலும் அதற்கு முன் னைய பண்பாட்டு வரலாறென்பது இங்கு வாழ்ந்த தொல்குடிகளின் வாழ்வியல் அனுப வங்களுடன் இரண்டறக் கலந்துள்ளது. தமிழருக்குரிய தனித்துவமான சமூக, பொருளாதார, அரசியல், சமய வரலாறும் அதனோடிணைந்த வாழ்வுமுறையும் இந்திய துணைக்கண்டத்தில் சிறப்புடன் இருந்துள்ளமையினை பல்வேறு இலக்கிய ஆதாரங்களும் மட்டுமன்றி கல்வெட்டுக்களும் தொல்லியல் அகழ்வராய்ச்சிகளும் வெளிப் படுத்தி நிற்கின்றன. இந்தவகையில் தமிழர் பண்பாட்டு மரபில் சைவசித்தாந்தச் சிந்தனையின் வெளிப்பாடு தொடர்பாக மானிடவியல் நோக்கில் இவ்வாய்வு பகுப்பாய்வு செய்ய முனைகின்றது.

மரபுகள், வழக்காறுகள் பண்பாட்டின் அங்கங்களாகும். மக்களின் மரபார்ந்த வாழ்வியலில் அவர்களுடை பண்பாட்டு மரபார்ந்த அறிவு முக்கியத்துவம் பெறுகின்றது. மரபு என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினுள் சமூக பண்பாட்டுவயமாக்கத்தின் வழி யாகக் கடத்தப்படுகின்ற விழுமியங்கள், வழக்கங்கள், அறிதிறன்கள், நம்பிக்கைகள், நடத்தைமுறைகள் ஆகியன சார்ந்த வடிவங்களுக்குப் பதிலாகப்

முதுநிலை விரிவுரையாளர், மானிடவியல், சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பயன்படுத்தும் ஒன்றாகும். இது கடந்த காலத்தை நிகழ் காலத்துடன் இணைக்கிறது என்பார் அல்லிசன்[1]. சைவசித்தாந்த தத்துவ சிந்தனையானது தமிழர் பண்பாட்டு வாழ்வில் மரபார்ந்த நிலையில் கையளிக்கப்பட்டு வந்துள்ளது. சைவசித்தாந்தம் ஒரு கொள்கை யாக உருபெற்ற காலம் சோழர்காலம் எனக் கூறப் பட்டாலும் சைவசித்தாந்த சிந்தனை தமிழர் பண்பாட்டு மரபில் தொடர்ச்சியாக நிலவி வந்துள்ளமையினை இவ்வாய்வின் வழியாக விளங்கிக்கொள்ள முடிகின்றது.

மானிடவியலில் இனவரைவியல் சார்ந்த அணுகுமுறைகள் முதன்மையானவை. இவ் அணுகுமுறையானது மனித சமூகம் பண்பாடு தொடர்பான ஆய்வில் தனித்துவமானது. அதாவது அகவயம் சார்ந்த புரிந்துகொள்ளுதல் (emic understanding), புறவயம் சார்ந்த புரிந்துகொள்ளுதல் (etic understanding) ஆகிய இரண்டு புரிந்துகொள்ளுதலும் மக்களின் சமூக பண்பாட்டியல் வாழ்வின் உண்மையான அர்த்தங்களை வெளிக்கொண்டு வருவதற்கு அடிப்படையானது. அதாவது குறிப்பிட்ட பண்பாட்டியல் விடயத்தினை மக்கள் எப்படி நோக்குகின்றார் என்கின்ற உள்ளார்ந்த பார்வையும் (insider view), குறிப்பிட்ட அதே விடயத்தினை பிறிதொரு பண்பாட்டினைச் சேர்ந்தோர் எவ்வகையில் அர்த்தங்கள் கொள்கின்றனர் எனும் புறநிலை நோக்கும் (outsider view) முதன்மையானது. தமிழர் பண்பாட்டியல்கூறுகள் தொடர்பான ஆய்வில் இவ்விரு அணுகுமுறைகளுடன் கூடிய ஆய்வு என்பது பல்வேறு மானிடவியலர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தவகையில் தமிழர் பண்பாட்டில் சைவசித்தாந்த மரபு பற்றிய மானிடவியல் நோக்கிலான இவ்வாய்வானது மானிடவியலில் முதன்மைத்துவமான அகவயம், புறவய புரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

சைவசித்தாந்த தத்துவ சிந்தனையின் அகவயப் புரிந்துகொள்ளுதலை ஆய் வாளர் முதல்நிலைத் தரவு மூலங்களான சங்கப்பாடல்கள், திருமுறைகள், சாத்தி ரங்கள், பிரபந்தங்கள் போன்வற்றின் துணையுடனும் புறவயமான புரிந்து கொள்ளுதலை சைவசித்தாந்தம் தொடர்பாக ஆராய்ச்சியாளர்களால் முன்வைக்கப்பட்ட எடுத்துரைப்புகள், விவாதங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகளின் வழியாக பெற்றுக்கொண்டுள்ளார். மேற் குறிப்பிட்ட தகவல்கள், தரவுகள் வழியாக இவ்வாய்வுக்கட்டுரையானது எவ்விதமான சீர்தூக்கி சாரிபார்க்கும் இயல்புகளுக்கு (features of ethnocentrism) அப்பால் பண்பாட்டுச்சார்புடைமை (cultural relativism) நோக்கின் வழியாக எழுதப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**சமயமும் பண்பாடும்**

பண்பாடு என்பது குறிப்பிட்ட பிரதேசத்து மக்களின் வாழ்வுமுறையின் முழுமையான தொகுப்பு என்று வரையறை செய்யலாம். பண்பாடு தொடர்பான பல்வேறுபட்ட மானிடவியல் வரையறைகளில் இது மிக எளிமையான வரையறை. ஒவ்வொரு பிர தேசத்து மக்களும் தத்தமது சுற்றுச்சூழல், சமூகச் சூழலிற்கு ஏற்ப தகவமைத்து கொண்ட முறைமை பண்பாடு. ஒவ்வொரு தனியனுக்கும் தான் பின்பற்றும் பண்பாட்டியல் வாழ்வு என்பது சௌகரியமானதும், மிகவும் பரீட்சியமானதாகவும் விளங்குகின்றது. இன்னொருவகையில் கூறினால் பண்பாடு என்பது எண்ணற்ற உட்கூறுகளின் முழுமை. விழுமியங்கள், நியமங்கள், சட்டங்கள், வழக்காறுகள், குறியீடுகள் என எண்ணற்ற கூறுகளின் முழுமையாகவே ஒவ்வொரு

பண்பாடு காணப்படுகின்றது. இங்கு சமயம், மொழி போன்றன முதன்மையான பண்பாட்டியல் கூறுகளாக ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படுகின்றன.

சமகால சமூகங்களின் சமூக அடையாளம் என்பது அவர்களுடைய சமூக பண்பாட்டியல் கூறுகளுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. இந்நிலையில் சமய அடையாளம் பண்பாட்டின் வலிமை யான கூறாக தொழிற்பட்டு வருகின்றது. இதனால் மக்களிடையே நிலவும் சமய நம்பிக் கைகள் தொடர்பான ஆய்வுகள் மானிடவியல் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தவகையில் பிரேசருடை கோல்டன் பக் (The Golden Bough 1890), டுர்கைமின் சமய வாழ்வினுடைய மூல வடிவங்கள் (The Elementary forms of the Relgious Life 1912) ரைலருடைய தொன்மைப் பண்பாடு (Primitive Culture: Researches into the Development of Mythology, Philosophy, Religion, Language, Art and Custom 1873) ஆய்வுகள் தொன்மைமக்களின் சமய நம்பிக்கைகளுடன் தொடர்புடைய வகையில் அமைந்துள்ளன. மக்களுடைய நாளந்த வாழ்வியல் நடைமுறைகளில் சமயம் சார்ந்த நம்பிக்கையும் அதன் வழியான சமூக நடைமுறைகளும் செல்வாக்குச் செலுத்துகின்றமையினை மேற்குறிப்பிட்ட அறிஞர்களுடைய ஆய்வு முடிவுகள் வெளிப் படுத்தி நிற்கின்றன. குறிப்பிட்ட பிரதேச மக்களினை ஒன்றிணைப்பதில் சமயம்சார் கூறுகள் முதன்மை பெற்றுள்ளமையினை இந்திய, ஆபிரிக்க தொல்குடிகளின் வாழ்வியல் அனுபவங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

சமயம் என்பது இயல்புகடந்த ஆற்றலின் மீதான நம்பிக்கை என ரைலர் அவர்கள் குறிப்பிடுகின்றார்[2]. இது சமயம் தொடர்பான எளிமையான வரையறை. சமயம் தொடக்கம் அரசியல், சமூகவியல், பொருளியல் மற்றும் உளவியல் போன்ற இன்னோரன்ன துறையினைச் சேர்ந்தவர்கள் தத்தமது நோக்கு நிலையில் சமயம் தொடர்பான வேறுபட்ட வரையறைகளைச் செய்துள்ளனர். எனினும் மானிடவியலாளர் சமயத்தினை வரையறை செய்யும்போது 'சமயம்என்பது மாற்றமடையும் விஞ்ஞான அறிவுடன் மட்டுமன்றி இயல்பான மனித அனுபவங்களுடன் கூடிய உலகத்தின் இயல்பு பற்றிய இயற்கை கடந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது'[3] எனவும், மக்களிடையே நிலவும் இயற்கைகடந்த ஆற்றல் தொடர்பான நம்பிக்கையுடனும் தொடர்புபடுத்தி வரையறை செய்கின்றனர். உண்மையில் சமயம் என்பது தனியே நம்பிக்கையுடன் மட்டும் தொடர்புடைய ஒன்றல்ல இது சடங்குகள், ஐதீகங்கள், சில செயற்பாடுகள், கட்டுப்பாடுகள், விதிகள் என பல்வேறுபட்ட கூறுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

எட்வேட் நோர்பெக் குறிப்பிடும் போது 'சமய நம்பிக்கைகளும் செயற்பாடுகளும் மனிதர்களால் தங்களுடைய வாழ்வியலின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை'[4] எனும் கருத்தும், கிளிபோட் கீட்ஸினுடைய 'சமயமானது மக்களின் ஒழுக்கவியலையும் அவர்களது உலகப்பார்வையினையும் ஒன்றிணைக்கின்ற புனிதமான குறியீடுகளின் ஒரு முறைமை'[5] என்ற விளக்கமும் சமயமும் பண்பாடும்எனும்எண்ணக்கருவினைவிளங்கிக் கொள்வதற்கு இங்கு மிகவும் பொருத்தமானது. ஏனெனில் உலகளாவிய நிலை ஆயிரத்திற்கு மேற்பட்ட சமய நம்பிக்கைகளும் செயற்பாடுகளும் காணப்படுகின்றன. அவற்றுள் சில நிறுவனமயமாக்கம் அடைந்துள்ள போதும் இன்னும் சில மக்களின் வாழ்வியல் அனுபவங்களின் வழியாக உயிர்ப்புடன் இன்றும் உலகளாவிய நிலையில் பேணப்பட்டு வருகின்றது.

தமிழர் மரபில் வேறுபட்ட பொருண்மைகளை உள்ளடக்கி சமயம் வரையறை செய்யப்பட்டாலும் அதன் அடிப்படை செம்மையான சீரா வாழ்வு என்பதாகும். எடுத்துக்காட்டாக 'பொய்தீர் ஒழுக்க நெறியே சமயம். அது வாழ்வை அடிப்படையாகக் கொண்டு வாழ்வை செம்மை செய்வது. தெய்வங்களை உடையது'[6]. இந்நிலையில் தென்னாசியாவின் மிகத் தொன்மையான சமயப் பண்பாட்டுப் பாரம்பரியமாக சைவசமயம் காணப்படுத்துகின்றது. இது பிராந்திய ரீதியான பண்பாட்டுத் தனித்துவத்தினைப் பேணிவருகின்ற அதே வேளை பரந்த தென்னாசியப் பிராந்தியத்தின் பண்பாட்டியல் பொதுமையாகும் (Cultural Universal phenomenon in Pan-South Asian Region). இந்நிலையில் இவ்வாய்வானது சைவசமய மரபில் காணப் படும் பல்வேறு தத்தவமரபுகளில் ஒன்றான சைவசித்தாந்தத்தின் பண்பாட்டியல் பிரதிபலிப்புக்களை பண்பாட்டு மானிடவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்ய முயல்கின்றது.

**தத்துவமும் பண்பாடும்**

தத்துவம் என்பது பண்பாட்டுப் பொதுமை. உலகப் பண்பாடுகள் ஒவ்வொன்றும் தனித்துவமான தத்துவ சிந்தனைகளைக் கொண்டுள்ளன. ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி 'Philosophy' (தத்துவம்) என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வாழ்வின் பொருள் குறித்து வழங்கும் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் ஆய்தல் என்ற பொருள் கோடுகின்றது. மறுபுறத்தில் கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி 'தத்துவம்'(Philosophy) என்ற தமிழ்ச் சொல்லிற்கு பிரபஞ்சத்திற்கும் மனிதருக்கும் உள்ள உறவு, மனித வாழ்வின் பொருள், குறிக்கோள் ஆகியவற்றைப் பற்றிச் சிந்தனை ரீதியாக ஆராயும் துறை என விளக்கம் தருகின்றது. இந்நிலையில் உலகின் ஒவ்வொரு சமூகத்தினரும் குறிப்பிட்ட சமூக-பண்பாட்டுச் சுற்று சூழ்நிலையின் அடிப்படையில் வாழ்வியல் விடயங்கள் தொடர்பான அர்த்தப்படுத்தல்களை பேணிவருகின்றன. இவை காலவோட்டத்தில் அச் சமூகத்தினரது தத்துவ மரபுகளாக இனங்கணப்படுகின்றன. இந்தவகையில் தமிழர் பண்பாட்டில் பல் வேறு தத்துவமரபுகள் காணப்பட்டாலும் இன்றுவரை நிலைபெற்று காணப்படுவது 'சைவசித்தாந்தம்' எனும் தத்துவமரபாகும். இது தனியே தத்துவமாக மட்டும் இல்லாது மக்களின் வாழ்வியல் அனுபவமாகவும் காணப்படுகின்றது.

இன்றைய உலகின் பல்வேறு ஆராய்ச்சி துறைகளிற்கெல்லாம் தலையான மரபாக திகழ்வது 'தத்துவ' மரபாகும். ஒவ்வொரு ஆராய்ச்சித் துறைகளும் தத்துவ மரபின் வழித்தோன்றல்களே. ஆரம்ப காலத்தில் பல்வேறு சமூகம், சமயம், சுற்றுச் சூழல் போன்ற இன்னோரன்ன விடயங்களைப் பற்றி சிந்தித்தவர்கள் தத்துவத்துறையினரே. இன்றும் ஒவ்வொரு துறையும் தத்தமது துறைசார்ந்த விடயங்களைப் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் தத்துவ சிந்தனைகளை 'கோட்பாட்டியல் அணுகுமுறை' எனும் அடிப்படையில் பின்பற்றிவருகின்றன. இந்தவகையில் சைவசமயம் தொடர்பான ஆராய்ச்சியில் சைவசமயத் தத்துவங்கள் மிகவும் துணைபுரிகின்றன.

தத்துவத்திற்கும் உலகப் பண்பாட்டு மரபுகளுக்கும் இடையிலான தொடர்பினை மேற்கு -கிழக்கு இருகூறிடும் அணுகுமுறையின் வழியாக உணர்ந்து கொள்ள முடியும். மேற்குலக கோட்பாட்டியல் திறன் விஞ்ஞானம் மற்றும் ஜனநாயகத்துடனும் கீழைத்தேய கோட்பாடுகள் அறிவுணர்ச்சி சமய அழகுணர்சியுடன் கூடிய தெய்விகத்துக்கும் முதன்மைத்துவம் கொடுகின்றது[7]. கீழைத்தேய தத்துவ மரபிற்கும் சமயத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. இந்நிலையில் தத்துவம்

என்பது மரபார்ந்த சமயத்தின் ஒரு விரிவாக்கம் அல்லது நேர்த்தியான ஒன்று என வரையறை செய்யப்படுகின்றது[8].

தத்துவ சிந்தனை என்பது சமயத்தினைவிடவும் பழமையானது. இது மக்களுடைய ஐதீகம் சார்ந்த மாந்திரிக நம்பிக்கையுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டது. தொன்மை மக்கள் மத்தியில் (வரலாற்றுக் முற்பட்ட கால) சமயம் என்ற ஒன்று காணப்படவில்லை. அதனால் அங்கு வழிபாடும், யாகம் செய்தலும் காணப்படவில்லை. மாறாக அவர்களிடம் மாந்திரீக நம்பிக்கை காணப்பட்டது. ஏனெனில் அவர்களுக்கு ஏற்பட்ட தேவையினை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஒன்றைச் செய்து ஒன்றைப் பெற்றுக் கொண்ட முறை காணப்பட்டது. எடுத்துக்காட்டாக கிழக்கு ஆபிரிக்கக் குகைளில் வரையப்பட்டிருந்த நியர்ண்டதால் காலத்து ஓவியங்கள் வேட்டையின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டனவாக அமைகின்றன. தொன்மைமக்களின் மாந்திரிகக் கோட்பாட்டின் முன்முடிவுகளாகவே பிற்பட்டகால 'மெய்யியல்' என்ற சொற்பதம் பயன்படுத்தப்படுகின்றது[9]. தத்துவத்திற்கு சிந்தனை அடிப்படையானது என்பது இதன்வழியாகப் புலப்படுகின்றது. ஒவ்வொரு பண்பாடும் தனித்துவமான சிந்தனை மரபினைக் கொண்டு காணப்படுகின்றது. இச்சிந்தனை மரபானது தனியே குறிப்பிட்ட பண்பாட்டிலிருந்து மட்டும் எழுச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதில்லை, பண்பாட்டு பரவலாக்கத்தின் வழியாகவும் இணைத்துக் கொள்ளப்பட்டவையாகக்கூட இருக்கலாம். இந்தவகையில் தமிழர் பண்பாட்டில் சைவசித்தாந்தமும் தமிழர் பண்பாட்டு மரபில் காலந்தோறும் இருந்துவந்தாலும் அது காலவோட்டத்தில் நிகழ்ந்த பண்பாட்டுப் பரவுகையின் வழியாக சில கூறுகளைத் தகவமைத்துக் கொண்டு இன்றுவரை நிலை பெற்றுள்ளமையினை ஆழ்ந்து நோக்கினால் புரிந்துகொள்ள முடியும்.

இந்தியதத்துவஞானம்சரியாகசிந்திப்பதற்கு மட்டுமன்றி முறையாக வாழ்வதற்கும் வழிகாட்டுகின்றது. கொள்கையளவில் மட்டும் நில்லாது வாழ்க்கையோடு ஒன்றாகக் கலந்து நிற்பதே இந்திய தத்துவ ஞானத்தின் முக்கிய சிறப்பியல்பு என்று லக்ஷ்மணஐயர்[10] குறிப்பிடுவது இந்தியப் பண்பாட்டுக்கும் அங்கு நிலவும் தத்துவ சிந்தனைக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பினை வெளிப்படுத்துகின்றது. இந்தவகையில் இவ்வாய்வானது தமிழர் பண்பாட்டுக்கும் சைவசித்தாந்த தத்துவ சிந்தனைக்கும் இடையிலான சிந்தனையினை மானிடவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்கின்றது.

**தமிழர் பண்பாட்டில் சைவசித்தாந்தம்**

இந்தியத் துணைக்கண்டமானது உலகின் பழமையானசமய மரபுகளின்தாயகம். சனாதன சமயம் என்று சொல்லப்படும் இந்துசமயம் முதல் கொண்டு பௌத்தம், சமணம் போன்ற புராதன சமயங்களின் உருவாக்கங்களும் இப்பிராந்தியத்திலேயே இடம்பெற்றுள்ளன. காலவோட்டத்தில் புதிய சமயங்களும் அவற்றோடிணைந்த சமயக் கொள்கைகளும் தோற்றம் பெற்றன. இந்நிலையில் சைவ சித்தாந்தம் என்பது சிவனை முழுமுதல் கடவுளாக வழிபடும் மக்கள் கூட்டத்தின் பிரதான தத்துவக் கொள்கையாக இன்றுவரை காணப்படுகின்றது. சிவனை முழுமுதல் தெய்வமாகக் கொண்ட சைவசமயத்திற்குள் வேறுபட்ட தத்துவ மரபுகள் ஆரம்பகாலம் முதல் நிலவி வந்தாலும் சைவசித்தாந்தக் கொள்கைக்குத் தனித்துவமான பண்பாட்டு வரலாறும், வாழ்வியல் முறைகளும் காணப் படுகின்றது.

தத்துவ அறிவுக்கு இலக்கியங்கள் மிக ஆதாரமானவை.இந்திய தத்துவ ஞானத்திற்கு அடிப்படையாக பல்வேறு இலக்கியங்கள் காணப்படுகின்றன. இந்திய தத்துவங்களுக்கு மூலமாக அமைவது உபநிடதங்கள். ஆனால் சைவசித்தாந்த கொள்கைகளானவை உபநிடதக் கருத்துக்களுக்கு அப்பால் ஆகமங்களுக்கும், பக்தி நெறியாளர்களின் வாழ்வியல் அனுபவங்களுக்கும் முதன்மைத்துவம் கொடுக்கு வகையில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கருத்துருவம் பெற்றது. எனினும் சைவசித்தாந்த தத்துவச் சிந்தனை பண்டைத் தமிழர் வாழ்வியலில் இருந்துள்ளமையினைப் பழந் தமிழ் இலக்கியங்களும் பக்திஇலக்கியங்களும் வெகுவாகக் கோடிட்டு காட்டுகின்றன. சைவசித்தாந்த தத்துவ மரபினை ஆய்வாளர்கள் சிலர் சம்ஸ்கிருத மரபிலான சைவசித்தாந்தம், தமிழ் மரபிலான சைவசித்தாந்தம் என்று வகைப்படுத்தி நோக்கும் மரபு காணப்படுகின்றது[11]. தமிழ் சைவசித்தாந்த மரபினர் தங்களை சமஸ்கிருத சைவசித்தாந்தத்திலிருந்து வேறுபடுத்தி நோக்குகின்றனர்[12].

சைவசித்தாந்தத்தின் சமயப் பண்பாட்டியல் தனித்துவத்தினை நா.ரா. முருகவேள் தன்னுடைய சைவசித்தாந்தம் என்னும் நூலில் குறிப்பிடும் போது 'சைவசித்தாந்த நெறியானது உலகளாவிய உயர்ந்த நெறி, எந்தவொரு சமயத்தையும் இகழ்ந்து ஒதுக்காதது, பிணக்கும் பூசலும் இன்றி எல்லாச் சமயங்களையும் தழுவிப் போற்றுவது நடைமுறை வாழ்க்கைக்கு இயைந்தது. சமயம் வேறு வாழ்க்கை வேறு என்றில்லாமல் சமயமே வாழ்கை, வாழ்க்கையே சமயம் என்ற தன்மையில் பிரிவின்றி ஒன்றி நிற்பது' என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது[13].

சைவசித்தாந்தம் என்பது 'முடிந்த முடிவு' என்று மிகச் சுருக்கமாக வரையறை செய்வர். சைவசித்தாந்தம் என்ற சொற் பயன்பாடானது மத்திய கால இந்தியாவில் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. திருமூலர் முதலில் இச்சொல்லினைப் பயன்படுத்தியுள்ளார். சைவசித்தாந்த தத்துவசிந்தனையின் முழுத் தொகுப்பாக பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் விளங்குகின்றன. மெய்கண்டதேவர் பின்னர் வந்த கந்தபுராணத்தில் சைவசித்தாந்த அடிப்படைச் சிந்தனைகள் இலக்கிய வடிவத்தினுள் சேர்க்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ் மரபில் காணப்படும் சைவசித்தாந்த சிந்தனையானது காஸ்மீர் தத்துவ சிந்தனை மரபின் தொடர்ச்சியாக சில ஆய்வாளர்களால் வியாக்கியானம் செய்யப்படுகின்றமை இங்கு நம் கவனத்திற்குரியது. இவ்வாய்வானது சைவசித்தாந்தம் தமிழர் மரபுடையது என்று நிறுவுவதினை நோக்காக் கொண்டதல்ல. மாறாக தமிழர் பண்பாட்டு மரபில்சைவசித்தாந்த சிந்தனையின் செல்வாக்கினை மானிடவியல் நோக்கில் பின்வரும் பிரதான நிலைக்களங்களில் வழியாக வெளிக்கொணர் முனைகின்றது.

### திணை வாழ்வியல் மரபில் சைவசித்தாந்தம்

சைவசித்தாந்த சிந்தனையானது தமிழர் வாழ்வியலுடன் இணைந்து காணப்பட்டுள்ளது. பழந்தமிழ் இலக்கியங்கள் திணைசார் வாழ்வியலைப் பிரபலித்துள்ளன. ஐந்திணை மரபிற்கும் தனித்துவமான தெய்வங்கள் இருந்துள்ளன. ஆனாலும் சைவசித்தாந்தம் போற்றும் முழுமுதல் தெய்வம் 'சிவன்'. சங்க இலக்கியத்தில் நிலத்திற்குரிய தெய்வமாக போற்றப்படாத போது சிவன் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன. சிவன் நிலத்திற்குரிய தெய்வமாகப் போற்றப்படாதமைக்கு க.வெள்ளைவாரணனர் அவர்கள் ஓர் ஆய்வு மாநாட்டுக் கலந்துரையாடலில் குறிப்பிடும் போது 'கடவுள் நிலத் தெய்வத்துள் அடங்காது. அனைத்தினையும் கடந்த நிலையில் உள்ளவன்

கடவுள். அது சிவபெருமானை குறிக்கும்' என்பார்[14]. சங்க இலக்கியங்களில் 'சிவன்' என்ற சொற் பயன்பாடு இருந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க நூல்களிலிருந்து தமிழ் மக்களுடைய பண்டைய சமய வாழ்க்கையின் இயல்பினை அறியலாம். தென்னாட்டில் நிலவிய சமய வாழ்க்கை பழங்காலத்தில் ஒரு தனிமையான பண்போடு இருந்ததாகத் தெரிகிறது என்பார் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள்[15]. இந்நிலையில் பல்லவர்காலத்தில் மிகவும் சிறப்பாகப் போற்றப்பட்ட சிவன் பற்றிய சிந்தனைகள் சங்ககாலத்தில் குறைவாக இருந்துள்ளது. ஆனாலும் சைவசித்தாந்த சிந்தனையுடன் இணைந்த விடயங்கள் சங்காலத்தில் சிவனுடன் தொடர்புபடுத்தி விளக்கப்பட்டுள்ளமைக்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. மதுரைக் காஞ்சியில் ஐம்பூதங்களைப் படைத்தவன் மழுவினைக் கொண்ட கடவுள் என்று சைவசித்தாந்தம் குறிப்பிடும் சிவனின் ஐந்தொழில்கள் ஒன்றான படைத்தல் தொழில் பற்றிக் பின்வருமாறு குறிப்பிடுகின்றது

'நீரு நிலனுந் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துட னியற்றி
மழுவா ணெடியோன்'[16]

சிவனுடைய தோற்ற இயல்புகளையும் அவனுடைய பண்பியல்புகளை சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக பிற்பட்ட சோழர்காலத்தில் '...சத்தி பின்னமிலா னெங்கள் பிரான்' என்று திருவருட் பயனிலில்[17] குறிப்பிட்டதைப் போன்று சிவனின் ஒருபாகத்தில் உமை உறைகின்றாள் என்ற அர்த்தநாதீஸ்வர தோற்றவியல்பு பற்றி திருமுருக்காற்றுப்படை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"வெள்ளேறு
வலவயி னுயரிய பலர் புகழ் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கும் மிமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்"[18]

சங்க இலக்கியப் பாடல்குறிப்புக்களிடையே சிவபெருமான் பற்றிய செய்திகள் பலவாறாக இடம்பெற்றுள்ளமையினை சங்கப் பாடல்களை மிக ஆழமாக நோக்கும் போது புலப்படும். அந்தவகையில் 'ஆழ் கெழு கடவுள்'[19], 'முக்கட் செல்வர்'[20], 'பிறைநுதல் விளங்கு மொருகண்'[21], 'முதுமுதல்வன்'[22] போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இவ்வாறு சங்க இலங்கியங்கள் குறிப்பிடும் கருத்துக்கள் பழந் தமிழர் பண்பாட்டில் சைவசித்தாந்த சிந்தனையுடன் இணைந்த கருத்துநிலைகள் இருந்துள்ளமையினை வெளிப்படுத்துகின்றது. இது தொடர்பாக சைவசித்தாந்த உண்மை வரலாறு எனும் நூலில் சுப்பிரமணியபிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்

'ஞானமுதல்வனை சுட்டும் பழந்தமிழ் சொற்கள் கடவுள், இயவுள், கந்தழி என்பன. 'கடவுள்' என்பதன் நேர்பொருள் 'கடந்துள்ள பொருள்' என்பது எதனைக் கடந்தவன் என உலக முதல்வனைக் கூறுதல் இயல்பெனின், காணப்படுமுலகத்தை என்பது. அறிவு முதிர முதிர கடவுள் உள்ளத்தை கடந்துள்ளவன் என்பது விளங்கும். விளங்கவே சொற்கடந்தவன் அவனெனச் சொல்லவேண்டியதில்லை'[23]

சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள 'கந்தழி'[24] என்ற சொல்லானது கடவுள் நிலையாகத் தொல்காப்பியர் குறிப்பிடதாகக் கூறப்படுகின்றது. ஆனாலும் சில ஆய்வாளர்கள் இதனை மரலிங்க வழிபாட்டைக் குறிப்ப தென்றும்[25], இது (கந்தழி) கந்து + அழி என்ற இரு சொற்களாலாய ஒருதொடர் என்றும், கந்து என்பது பற்றுக்கோடு என்றும் அதனால் கடவுள் பற்றுக்கோடற்றவன் என்பது பொருள்படும் எனவே சைவசித்தாந்த சிந்தனையின் அடிப்படையில் 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்' என்று

போற்றப்படும் இறைவனைச் சுட்டுவதாகவும் பொருளுரைப்பர்[26].

தமிழர் சொல்லியல் ஆராய்ச்சியின் வழியாகவும் தமிழர்களிடையே நிலவிய சைவசித்தாந்த சிந்தனையினை பழமைத் தன்மையினை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. மேலும் தமிழ் எழுத்துக்களில் உயிர் எழுத்து, மெய் எழுத்து என்னும் பாகுபாடானது தமிழ் மரபின் உடம்பு வேறு உயிர் வேறு என்ற ஆன்ம தத்துவத்துடன் இணைத்து நோக்கப்படத்தக்கது. குறிப்பாக 'உடல்மேல் உயிர்வந் தோன்றுவது இயல்பே' என்ற இலக்கண விதி இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. இவ்வாறாக பழந்தமிழர் வாழ்வியலில் உள்ளுறை பொருண்மையாக அமைந்துள்ள சைவசித்தாந்த சிந்தனை தொடர்ந்து வந்த சங்கமருவிய காலம், பல்லவர் காலத்தில் மிகவும் வெளிப்படையாக கருத்துரைப் பொருண்மையாக அமைந் துள்ளது.

**அற ஒழுக்கவியல் மரபில் சைவசித்தாந்தம்**

சைவசித்தாந்தம் குறிப்பிடும் தத்துவ சிந்தனைகள் பலவற்றினை திருக்குறளிலும், காரைக்கால் அம்மையார் பாடல்களிலும் காணலாம். திருக்குறளில் கடவுள் வாழ்த்தில் சைவசித்தாந்தம் குறிக்கும் பதியின் எட்டுவகையான இயல்புகளை அடிக் கோடிட்டிருப்பதினைப் பின்வரும் அடிகளின் வழியாகக் காணலாம்.

'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'[27]

மேலும் சங்க இலக்கியங்களில் ஆங் காங்கே காணப்பட்ட கன்மம் பற்றிய சிந்தனைகள் திருக்குறளில் வெகுவாகப் பேசப்பட்டுள்ளமையானது சங்கமருவிய காலச்சூழலில் சைவசித்தாந்த சிந்தனையானது அறம், ஒழுக்கம் சார்ந்த நிலையில் தமிழர் பண்பாட்டில் இருந்துள்ளமையினை அறியமுடிகின்றது.

**பக்தி மரபில் சைவசித்தாந்தம்**

சோழர் காலத்திற்கு முன்னை காலமான பல்லவர் காலத்தில் பக்தி நெறியுடன் இணைந்து சைவசித்தாந்த சிந்தனை தமிழர் பண்பாடெங்கும் பரவிடக் காணலாம். குறிப்பாக சைவசித்தாந்த சிந்தனையானது ஆகமமும் கோயில் வழிபாட்டுடனும் மிக நெருங்கிய தொடர்புடன் இருந்துள்மையினை பல்லவர்கால பக்தி இலக்கியச் சூழல் வெகுவாகக் காட்டியுள்ளது. அதாவது சைவ நாயன்மார்கள் சைவசித்தாந்தம் கூறும் சைவசமய வாழ்வியலை தங்கள் வாழ்விய லுடன் இணைத்துக் கொண்டு வாழ்ந்துள்ளமையானது இங்கு கவனத்திற் குரியது. சைவசித்தாந்தம் பேசும் முப்பொருட் களான பதி - இறைவன், பசு - ஆன்மா, பாசம் - தளைகள் ஆகியன பக்தி நெறிக் காலத்தில் நாயன்மார்களின் வாழ்வியல் வெளிப்பாட்டில் இடம்பெற்றிருக்க காணலாம். குறிப்பாக பதிகம் பாடிய நாயன்மார்களின் அனுபவங் களில் பதி ஆகிய இறைவனை பசுவாகிய தங்கள் ஆன்மாக்கள் சென்றடைய பல்வேறு பாசம் எனும் தளைகளால் சூழப்பட்ட வாழ்விலிருந்து விடுபடும் வகையில் அமையப் பெற்றுள்ளமையினை கவனத்தில் கொள்ளாலம். எடுத்துக் காட்டாக மாணிக்கவாசகர் 'சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எனையாண்ட..' என்று அச்சோதிப் பதிகத்தில் குறிப் பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இவ் வாறே ஏனைய நாயன்மார்களின் பக்தி பாடல்களிலும் இவ்வனுவங்கள் நிறையவே வெளிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பக்தி இலக்கியப் பதிவுகளிற்கு அப்பால் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் (கி.பி. 610-30) காஞ்சிபுரக் கல்வெட்டொன்றில்

‘சைவசித்தாந்தத்தைப் பின்பற்றுகின்றவன்’[28] என்று குறிப்பிட்டுள்ளமையானது சோழர் காலத்திற்கு முன்னையகால தமிழர் வாழ்வியலில் சைவசித்தாந்த சிந்தனையின் நெருக்கத்தினை வெளிப்படுத்துகின்றது.

**பேரரசு மரபில் சைவசித்தாந்தம்**

தமிழர் பண்பாட்டு மரபில் சைவசித்தாந்தம் சோழர் காலத்தில் ஒரு மெய்யியல் முறைமையாக வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழர் பண்பாட்டியல் வாழ்வில் சோழர்கள் சமயம், தத்துவம், கலை, ஆத்மீகம், அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு எனும் அனைத்திலும் மிகவும் உன்னதநிலையினைப் பெற்றிருந்துள்ளமையினை ஆய்வாளர்கள் பலரும் எடுத்துக்காட்டியுள்ளனர். குறிப்பாக பேராசிரியர் கைலாசபதி அவர்களின் ‘பேரரசும் பெருந்தத்துவமும்’[29] என்ற கட்டுரை மிகத் தெளிவாகவே சோழர்கால தமிழர் பண்பாட்டு வாழ்வியலில் சைவசித்தாந்த கொள்கையின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது. தத்துவம் தனியே சமயத்துடன் மட்டும் இணைந்த ஒன்றல்ல மக்களின் வாழ்வின் ஏனைய கூறுகளான ஒழுக்கம், அரசியல், பொருளாதாரம் போன்ற அனைத்துடனும் இணைந்தது.

சைவசித்தாந்த தத்துவம் மக்களின் வாழ்வியலுடன் ஒன்றிப் போயிருந்த நிலையில் அதற்கான சட்டகப் பிரமாணம் வெளிவந்தது சோழர் காலத்தில் தான். அதாவது பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் சைவசித்தாந்த சிந்தனையினை ஒழுங்கமைத்து தந்துள்ளது. எனினும் சில ஆய்வாளர்கள் மெய்கண்ட தேவருக்கு (கி.பி. 13நூ.) நான்கு நூற்றாண்டுகள் முன்பதாகவே சத்தியயோதி, பக்ருஹரி (கி.பி. 8நூ) என்பவர்களால் சைவசித்தாந்தம் ஒரு மெய்யியல் முறைமையாக விருத்திசெய்யப்பட்டு விட்டது என்பர்[30,31]. அதாவது அதுவரைகாலமும் மக்களின் வாழ்வியில் நிலவிய சைவசித்தாந்தம் சமய தத்துவமாகவும்(Religious Philosophy), ஒரு உலக நோக்கவும் (World View)உறுதியாக வரையறுக்கப்பட்டது.

தமிழருடைய பண்பாட்டில் நிலவிய சிந்தனையானது ஒரு சிறந்த தத்துவமரபாக எழுச்சி பெற்றது என்பதற்கு மூன்று பிரதான காரணிகளை டுனுவில என்பவர் குறிப்பிடுகின்றார். அதாவது சோழர் காலத்தின் அரசியல் செல்வாக்கு,தனிப்பட்ட முக்கியத்துவம், இறையியல் தொடர்பான கற்றல் போன்ற இல்லாவிட்டால்சைவசித்தாந்த தத்துவமரபானது உலகளாவிய சிறப்பினை அடைந்திருக்காது என்று குறிப்பிடுகின்றார்[32]. கி.பி 10 நூற்றாண்டுக்கு பின்னர் தென்னிந்திய சூழலில் நிலவிய பேரரசு மரபானது இதற்கு மிகவும் பெரு பங்களிப்புச் செய்துள்ளது.

சைவசித்தாந்த தத்துவ முறைமை பற்றிய உயர்ந்தளவிலான புரிந்தகொள்ளுதலானது சமஸ்கிருத மொழியில் அமைந்துள்ள சிவாகமங்கள் பற்றிய புரிந்துகொள்ளுதலை வேண்டிநிற்கின்றது. ஏனெனில் சைவ சித்தாந்தம் சைவக்கோயில் சடங்கியல் மரபுடன் மிக நெருகிய தொடர்பினைக் கொண்டது. சைவக் கோயில் சடங்கியல் தொடர்பான புரிந்துகொள்ளுதலுக்கும் நெறிப்படுத்தல்களுக்கும்சிவாகமங்கள்மிகவும் அவசியமானவை. பல்லவர்காலத்திலேயே சிவாகமங்களின் முக்கியத்துவத்தினை நாயன்மார்கள் உணர்ந்திருந்தாலும் அவை ஆலய வழிபாட்டில் மிகவும் முக்கியத்துவம் பெற்றது சோழர்காலப்பகுதியில் தான். ஏனெனில் பல்லவர்கால கோயில் கட்டக் கலை மரபுகள் சோழக்காலத்தில் சிவாகம மரபிற்குட்பட்டு அமைந்துள்ளன. எடுத்துக் காட்டாக தஞ்சைப் பெருவுடையார் கோயில்.

பல்லவர்காலப் பக்தி இலக்கியங்கள் தமிழில் சிவனுடைய இயல்பினை மிகத்தெளிவாகச் வெளிப்படுத்தி நிற்கின்றது. ஆகையால் தமிழ் பக்தி மரபு தமிழ் சைவசித்தாந்திகளுக்கான முதன்மைத்துவமான பாரம்பரியத்தினை வழங்கியுள்ளது[33]. பக்திப் பனுவல்கள் சைவசித்தாந்த சாத்திரமரபின் உட்கூறுகளாக விளங்குகின்றமையினை பின்வரும் பாலடி தெளிவாகவே காட்டுகின்றது

வேதம் பசு. அதன் பால் மெய் ஆகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளுறும்' நெயங் - போதம்
நெய்யின் ஊறு சுவையாம் நீள்ட வெண்ணெய்
மெய்கண்டார் செய்த தமிழ் நூலின் திறம்

தமிழ் பக்தி பதிகங்கள் கடவுளின் உலகளாவிய முக்கியத்துவத்தினை எளிமையான உள்ளூர் மொழிநடைகளில் புலப்படுத்தியுள்ளன. அதாவது யார் கடவுள்? எப்படி கடவுளை வழிபடுதல்? ஏன் வழிபடுதல்? போன்ற வினாக்களுக்கான விடைகளை தரும்வகையில் பதிகங்கள் அமைந்திடக் காணலாம். எடுத்துக்காட்டாக சம்பந்தரின் 'தோடுடைய செவியன்...' எனத் தொடங்கும் தேவராத்தில் சிவபெருமானின் திருமேனி முறையாக விவரிக்கப்படுகின்றது. இவ்வாறே அப்பரும் 'குனித்த புருவமும்..' என்ற பாடலில் நடராஜர் திருவுருவக் காட்சியை வெளிப்படுத்துகின்றார். கோயில் வழிபாடுகள் பற்றிய செய்திகளையும் சம்பந்தரின் 'நின்னடியே வழிபாடுவாம்...எனத்தொடங்கும் தேவராத்தில் 'பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர் சுமக்கும்..' என்றும், அப்பர் 'நிலைபெறுமாறு எண்ணுதியே நெஞ்சே நீவா...' எனத் தொடங்கும் தேவாரத்தில் ஆலய வழிபாட்டு முறையினையும் விவரித்திருப்பது இங்கு கவனத்திற்குரியது. இவ்வாறு எண்ணற்ற எடுத்துக்காட்டுக்களை பக்தி இலக்கியங்களில் காணலாம்

இன்னொருவகையில் கூறினால் பக்தி பாடல்கள் சமயவுணர்வுடையதற்குரிய பாதையை எதிர்கால நோக்கில் முன்னிறுத்தி இருந்தது. இது சமஸ்கிருத சைவசித்தாந்த மரபில் மிகவும் சிக்கலான வகையில் அமைந்துள்ள கோயில் சடங்கியல் வழிபாட்டினை விடவும் மிகவும் நன்வழிப்படுத்தும் முறைமையாக அமைந்துள்ளது. இதனையடியொற்றியே சோழர்காலத்தில் வாழ்ந்த சந்தானாசாரியர்கள் தமிழில் சைவசித்தாந்த சிந்தனையை நூல்வடிவங்களில் உருவாக்கினர்.

தமிழர் பண்பாட்டு மரபில் குறிப்பாக சமய-தத்துவ மரபில் பக்தி மரபும் - பேரரசு காலத்தில் எழுந்த தத்துவ மரபும் தொடர்ச்சியுறவுடைய வகையில் காணப்படுகின்றன. சமயத்தினை வளர்க்க சமயவாதிகளான நாயன்மார்கள் தத்துவார்த்த சிந்தனையை உள்வாங்கி பக்தி நெறிநின்று வளர்த்தனர். ஆனால் பேரரசு நிலவிய காலத்தில் சமயத்தினை தத்துவநிலை நின்று வளர்ப்பதற்கு சாத்திரநெறிநின்று தத்துவவாதிகளான சந்தான ஆசாரியார்கள் வளர்த்தனர். சமயகுரவர்களும் சந்தான குரவர்களுக்கும் இடையிலான சமய-தத்துவ சிந்தனைப் போக்கின் தனித்துவமான இயல்பினை 'சைவ ஆதீனங்கள்' எனும் நூலில் ஊரான் அடிகள்[34] மிகவும் தெளிவாகவே காட்டியுள்ளார். இவ்வாறாகத் தமிழர் பண்பாட்டுப் படிமலர்ச்சியில் தத்துவ சிந்தனை என்பது மரபார்ந்த நிலையில் மக்களால் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வந்துள்ளமையினை அது பெரும் தத்துவ மரபாக பிற்பட்ட காலத்தில் வளர்ச்சியடைந்துள்ளமையினை அறியமுடிகின்றது. அவை தமிழர் பண்பாட்டியல் படிமலர்ச்சியினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

சைவசித்தாந்த மரபின் தனித்துவம் என்பது அது குருசீட பரம்பரையினர் வழிவந்த ஒரு தத்துவ சிந்தனை. உண்மையில் தத்துவம் என்பது ஆராய்ச்சி நோக்கு நிலை சார்ந்தது. இது குருசீட பரம்பரையை வலியுறுத்தும். அதாவது ஆசிரியரும் மாணவனும் தமக்கிடையே உள்ள ஞானவேட்கையினால் ஆராய்ந்து தெளிந்து மெய்ப்பொருட்கள் பற்றி உபதேசித்துள்ளனர். சிவஞான போதத்தில் மிகச் சுருக்கமாக உரைக்கப்பட்ட சைவசித்தாந்த சிந்தனையானது அதன் மரபில் வந்தோரால் மிகவும் நுணுக்கமாகவும் விரிவாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களில் சைவசித்தாந்த கருத்துக்களைச் சொல்ல சிவஞானசித்தியார் சுபக்கம்-பரபக்கம் எனும் இரண்டு பிரதான இயல்களில் விரித்துக் கூறுகின்றது. இம்மரபில் இறுதியாக வந்த உமாபதி சிவம் சிவப்பிரகாசம் தொடங்கி சங்கற்பநிராகரணம் வரையான சித்தாந்த அட்டகம் எனும் நூல்களில் மிகவும் விரிவுபடுத்தியுள்ளார்.

சைவசித்தாந்த மரபானது அகச்சந்தான பரம்பரை புறச்சந்தான பரம்பரை எனும் இரண்டு மரபுகளைக் கொண்டது. இங்கு அகச்சந்தானம் என்பது சிவபெருமானைக் குருவாகக்கொண்டு வந்த ஐதீகப்பரம்பரையைக் கொண்டது. அதாவது இந்துக்களால் இன்றும் சிவனின் உறைவிடமாகக நம்பப்படுகின்ற 'திருக்கைலாய மலை' மரபிலிருந்து வந்தவர்கள். இவர்களிடம் உபதேச மரபாக விளங்கிய சைவசித்தாந்தாந்தம் மெய்கண்ட தேவர் முதலா உமாபதி சிவம் வரையாக உள்ள சந்தானசாரியர் பரம்பரையின் வழிப்பட்டது. இங்கு இறுதி சந்தானாசிரியரான உமாபதி சிவம் தென்னாட்டில் கோயில் என்று சிறப்பிக்கப்படும் சிதம்பர மரபில் வந்தவர். இது தமிழ் பண்பாட்டின் தனித்துவத்தினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

கடவுள், ஆன்மா மற்றும் உலகம் ஆகிய மூன்று பொருட்களையும் அடிப்படையாகக் கொண்டு சைவசித்தாந்தம் காணப்பட்டாலும் அதன் அடிப்படை இறைவனின் ஐம்பெரும் தொழில்களே ஆகும். இன்று மக்களிடையே சமயத்தின் நிலைபேறென்பது மக்களால் விடைகாண முடியாத சில வினாக்களுக்கு விடையளிப்பதாலாகும். அதாவது எப்படி பிறப்பு, எப்படி இறப்பு, இறப்பிற்குப் பின்னரான வாழ்வு போன்ற இன்னோரன்ன கேள்விகள் மக்களிடையே காணப்படுகின்றன. இவையனைத்துக்கும் ஒரே பதிலாக சைவசித்தாந்தம் கூறுவது ஐந்தொழில் தத்துவம். இவ் ஐந்தொழில் தத்துவத்தின் மறுவுருவமாகவே சிதம்பரத்தில் அமைந்துள்ள 'நடராஜர்' காணப்படுகின்றார். உண்மையில் தமிழர் தத்துவத்தின் அடிப்படையாக சிதம்பரமும் அங்குள்ள நடராஜரது தரிசனமே காணப்படுகின்றது. சிதம்பரத்தை தென்னாட்டுக்குரிய பூலோக கைலாயமாக மக்கள் நோக்குகின்றனர். இங்கு சிவன் நடமாடுவதன் வழியாகவே உலகம் இயங்குகின்றது என்ற நம்பிக்கை இம்மக்களிடையே வெகுவாகக் காணப்படுகின்றது. இதன் வழியாகவும் தமிழர் பண்பாட்டின்தனித்துவத்தின் அடிப்படையாக சைவசித்தாந்தம் விளங்குவதினை அறிய முடிகின்றது.

பேரரசு நிலவிய காலச்சூழலானது மக்களின் மரபார்ந்த வாழ்வியல் அனுபவங்களுடன் ஒன்றிணைந்து காணப்பட்ட தத்துவ சிந்தனைக்கு உலக நோக்கிலான புரிந்து கொள்ளுதலை வழங்கியுள்ளது. இது தத்துவ சாத்திர நூல்களாக மட்டுமல்லாது அதே காலத்தில் எழுந்த ஏனைய சமயநூல்களிலும் தொடர்சியுறுவதினைக் காணமுடிகின்றது.

**சைவசித்தாந்தம் தத்துவ மரபின்**

பேரரசு நிலவிய காலச் சூழ்நிலையிலிருந்து மாறுபட்டதொரு சமயச் சூழல்நிலையுடைதாகவே அதற்குப் பின்னைய காலப்பகுதிகள் அமைந்திருந்தது. தத்துவ சிந்தனைகுருகுலமரபின்இறுதிகுருமுதல்வாரன உமாபதி சிவத்துக்கு பின்னர் வந்த பரம்பரையினர் சைவசித்தாந்த சிந்தனையினை பேணுதற் பொருட்டு மடங்களையும் ஆதீனங்களையும்நிறுவிச்செயல்பட்டுள்ளனர். அந்தவகையில் பேரரசு காலத்தில்நிலைப் பெற்ற சைவசித்தாந்த தத்துவசிந்தனையானது அதன் பிற்பட்டகாலத்தில் தோன்றிய பிரபந்தவகை இலக்கியங்கங்களிலும், கோயில் வழிபாடுகளிலும் மற்றும் தனி மனித வாழ்வியல்களிலும் வெளிப்பட்டு நிற்கக்காணலாம். சைவசித்தாந்த சிந்தனை மரபின்தொடர்ச்சியினை பின்வரும்பகுதிகளில் சில வகைமாதிரியான எடுத்துக்காட்டுக்களின் வழியாக நோக்கலாம்.

பேரரசுக்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றிய திருவாவடுதுறை ஆதீனம் போன்ற ஏனைய ஆதீனங்கள் இன்றும் குருசீட பரம்பரை வழியாக சைவசித்தாந்த சிந்தனைகளைப் பேணிவருவதுடன் சைவசித்தாந்த வாழ்வு முறைகளில் பரவலடையச்செய்து வருகின்றன. எடுத்துக்காட்டாக திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம் போன்றவை தமிழ் நாட்டில் பல கோயில்களில் ஆகமரபு சார்ந்த சைவசித்தாந்த சிந்தனையுடன் இணைந்த வழிபாடுகள் தடையுறாவண்ணம் நிகழ்வதற்கு ஒழுங்குகள் செய்து வருகின்றமையானது இன்றும் சைவசித்தாந்த சிந்தனை மரபானது தமிழர் பண்பாட்டியல் வாழ்வில் உயிர்ப்புடன் இயங்கி வருகின்றமையினைக் காட்டுகின்றது.

அதேநேரம் அக்காலத்தில் வாழ்ந்த அனுபூதிமான்கள் நாயன்மார்கள் போன்று திருமுறையினையோ அல்லது சந்தான குரவர்கள் போன்று சாத்திரங்களையோ உருவாக்கவில்லை. ஆனால் அவர்களுடைய வாழ்வியல் அனுபவங்களும் அவர்களின் அருள்மொழிகளும் சைவசித்தாந்த சிந்தனை நிறைந்தனவாக அமைந்து காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக அபிராமிபட்டர், தாயுமான சுவாமிகள் போன்றவர்களின் பிரபந்தங்களில் சைவசித்தாந்த சிந்தனை உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாகத் தாயுமான சுவாமிகளின் பாடலொன்றில் ஆணவமலம் தொடர்பான விவரிப்பினை 'காரிட்ட ஆணவக் கருவறையில்..' என குறிப்பிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக தென்னிந்தியச் சூழலில் சைவ சித்தாந்த சிந்தனை மக்களிடையே மரபாக தொடர்ந்து பேணுவதற்கு பல்வேறுபட்ட தனிநபர்களும், அமைப்புக்களும் பெரும் முயற்சி செய்து வருகின்றன. எடுத்துக் காட்டாக ஆதீனங்கள் சைவசித்தாந்த புலமைத்தவத்துவத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு அதனை கல்விநிலைக்கு உட்படுத்தி சிறப்புப் பட்டங்களும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவில் மட்டுமன்றி ஈழத்திலும் வாழ்ந்த அறிஞர்கள் பலர் சைவசித்தாந்த சிந்தனையுடன் இணைந்த சமயவாழ்வினை வாழ்ந்துள்ளதுடன் அதனைப் போற்றிப் பேணிப்பாதுகாக்கவும், மக்களிடையே பரவலடைச் செய்யும் வகையிலும் செயற் பட்டுள்ளனர். எடுத்துக்காட்டாக ஆறுமுக நாவலர் இங்கு குறிப்பிடத்தக்கவர். நாவலர் அவர்கள் தன்னுடைய பால பாடம், சைவவினாவிடை ஆகிய நூல் களில் சைவசித்தாந்த சிந்தனையினை மிக வும் எளிமையான முறையில் மக்களைச் சென்றடையச் செய்வதற்கு ஆவண செய்துள்ளார். நாவலரைப் போன்றே பல அறிஞர்கள் சைவசித்தாந்த சிந்தனையினை

தமிழர் மரபில் நின்று நிலைபெற்று இருப்பதற்குப் பங்களிப்புச் செய்துள்ளனர். எடுத்துக்காட்டாகச் சைவப்பெரியார் சிவபாத சுந்தரானர்[35] அவர்கள் சைவசித்தாந்தம் என்ற சிந்தனையினை மிக எளிமையான மொழிநடையில் எழுதியது மட்டு மல்லாது திருவருட்பயனுக்கான விளக்க உரையினையும் வழங்கியுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. தென்னிந்தியா போன்றே ஈழத்திலும் நிறுவனங்கள் சில தோற்றம் பெற்று சைவசித்தாந்த சிந்தனை மக்களின் மரபார்ந்த வாழ்வியலுடன் ஒன்றிணைந்து செல்வதற்கு பல்வேறு முயற்சிகளை செய்த வருகின்றது. குறிப்பாக இலங்கையின் பாடசாலைக் கல்வித் திட்டத்தில் சமயபாடம் என்பது கட்டாயமானது. சைவசமய மக்களுக்கு குரிய சமயபாடத்தில் சைவசித்தாந்தம் பற்றிய அடிப்படையான அறிவு வழங்கப்பட்டு வருகின்றமை இங்கு கவனிக்கத்தக்கது.

**நிறைவுரை**

தத்துவம் என்பது பண்பாட்டு வழிப் பட்டது. ஒவ்வொரு பண்பாடும் தத்தமது வாழ்வியல் சூழ்நிலையின் அடிப்படையில் தத்துவ சிந்தனைகளை உருவாக்கி அவற் றினைப் பேணிவருகின்றன. எனினும் சில தத்துவ சிந்தனையானது காலவோட்டத்தில் வலுவிழந்தும் வழக்கிழந்துள்ளன. இன்னும் சில பண்பாட்டு ஒன்றியச் செயன்முறையின் வழியே புதிய தத்துவங்களாகப் புதுப் பொலிவும் பெறுகின்றன. ஆனால் தமிழர் பண்பாட்டில் சைவசித்தாந்தம் எனும் தத்துவம் பண்டைத் தமிழ் வாழ்வு தொடங்கி நீண்ட நெடிய பயணத்தின் வழியாக அழிவு றாது, சிதைவுறாது தனித்துவமான ஒரு பண்பாட்டியல் சட்டகமாக இன்றுவரை நீடித்திருப்பது அதன் தனிச் சிறப்பாகும். ஏனெனில் சைவசித்தாந்தம் தனியே தத்துவப் பொருண்மையாக மட்டும் இல்லாது அது தமிழர் பண்பாட்டின் வாழ்வியல் நெறியாக இருப்பதனாலேயே ஆகும்.

**அடிக்குறிப்புகள்**

1. Allison, Randal, S., (1997). 'Tradition'. In Thomas. A. Green (ed.). Folklore: **A Encyclopedia of Belifes,** Customs, Tales, Music and Art. Vol. II: 799-801.
2. Tylor, E.B., (1873), **Primitive Culture,** London, John Murray, p. 424.
3. Wallaace, A.F.C., (1966), **Religion: An Anthropological View,** Random House, New York, p. vi.
4. Norbeck, Edward., (1974), **Religionin Human Life: Anthropological Views,** Holt, Rinehart and Winston, New York, p. 7.
5. Geertz, Clifford, (1973), **The Interpretation of Cultures,** Basic Books, New York, p.98.
6. வெள்ளைவாரணன், க., (1984), சங்க இலக்கியத்தில் சமய நோக்கு. சங்க இலக்கிய கட்டு ரைகள் - கருத்தரங்கம், ப. 153-169, (கலந்துரையாடல் -193-194). தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர், ப. 194.
7. Cohen, Joseph, W, (1955), **The Role of Philosophy in Culture,** Philosophy East and West, 5, 2: 99-112. p 100.
8. மேலது, ப. 104.
9. Chattopadhyaya, Debiprasad, (1964), **Indian Philosophy:** A Popular Introduction, People's Publishing House, New Delhi, p. 36.

10. லக்ஷ்மணஐயர், கி., (1960), 'இந்திய தத்துவஞானத்தின் சிறப்பியல்புகள்', சிவஸ்ரீ.ச. குமாரசாமிக்குருக்கள் பாராட்டு விழா மலர், மலர்வெளியீட்டு சபை, யாழ்ப்பாணம், ப. 57.
11. Prentiss, Karen Pechilis, (1996), **A Tamil Lineage for Saiva Siddhanta Philosophy. History of Religion**, p. 232.
12. மேலது, 232.
13. சிறிகாந்தன்., ச, (2008), திருவருட்பயனில் சைவசித்தாந்தம், நாகலிங்கம் நூலாலயம், யாழ்ப்பாணம், ப. 21.
14. வெள்ளைவாரணனார், மு.கு.நூ., ப. 193.
15. வித்தியானந்தன், சு, (1954) தமிழர் சால்பு (சங்ககாலம்), குமரன் புத்தக இல்லம், கொழும்பு, ப. 69.
16. மதுரை., பக். 453-455.
17. திருவருட்பயன். 1: 2.
18. திருமுருகாற்றுப்படை. 151-154.
19. மேலது, 256.
20. புறம், 6: 18
21. மேலது, 55: 5.
22. மேலது, 166: 2.
23. சுப்பிரமணியபிள்ளை, கா., (1927), சைவசித்தாந்த உண்மை வரலாறு. தென்னிந்திய சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, ப. 24.
24. தொல். பொருள். 85.
25. அறவாணன், க. ப., (2011), மரவழிபாடு. பக்தவத்சலபாரதி (பதிப்.) பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர் சமயமரபுகள், புதுச்சேரி மொழியில் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி, ப. 98.
26. சங்கரனார், அம்பை., (1961), சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமைப் பேருரை. சைவசித்தாந்தம், ப. 87.
27. திருக்குறள், 9.
28. Prentiss op.cit., 234.
29. கைலாசபதி, க., (1968), பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். பாரி நிலையம், சென்னை.
30. கிருஷ்ணராஜா, சோ., (1998), சைவசித்தாந்தம் - மறுபார்வை, பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு, ப. 37.
31. Dunuwila, Rohan, A., (1985), **Saiva Siddhanta Theology: A Context for Hindu-Christian Dialogue**, Motilar Banarsidass, Delhi, P. 62-63
32. மேலது, பக். 35-36.
33. Prentiss op.cit., 239.
34. ஊரான் அடிகள், (2002), சைவ ஆதீனங்கள். சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், கடலூர்.
35. சிவபாதசுந்தரம், சு., (1932), சைவசித்தாந்தம், மெய்கண்டான் அச்சியந்திரசாலை, கொழும்பு.